Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 14, 2021

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 14, 2021 | ஒளி: 07 கதிர்: 178 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ | FREE



### விசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதி

# பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்

### பல குழுக்கள் தானாகவே செயலிழந்துவிடும்

பாராளுமன்றத்தை ஞாயிற்றுக்கிழமை (12) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒத்திவைத்துள்ளார் என, விசேட வர்த்தமானி அறிவித்தல் ஞாயிற்றுக்கிழமை (12) நள்ளிரவு வெளியிடப்பட்டது. அரசியலமைப்பின் 70 (அ)ஆவது பிரிவின் மூலம், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## புதிய கூட்டத்தை ஜனாதிபதி ஆரம்பிப்பார்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருப்பதாக பாராளுமன்ற தொடர்பாடல் அலுவலகம் அறிவித்துள்ளது.

புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும்போது, பாராளுமன்றத்தை வைபவரீதியாக ஜனாதிபதி ஆரம்பித்துவைத்து, அக்கிராசனத்தை ஏற்று, அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

தொடர்ச்சி P2

## முறைகேடுகளை மறைக்கவா ஒத்திவைப்பு



முறையான சமர்ப்பிப்புகள் இன்றி ஜனாதிபதியால் திடீரென பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரியது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மறுத்தார் கப்ரால்



இந்த வாரம் நடைபெறவுள்ள (நேற்று) அமைச்சரவைக் கூட்டத்துக்கு தான் அழைக்கப்பட்டதாக வெளியான செய்திகளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மறுத்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெறுவது தொடர்பில் விவாதிக்க அமைச்சரவை தன்னை அழைத்ததாக, எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவரை மேற்கோள் காட்டி ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என ஆளுநர் தனது டுவிட்டர் பக்கத்தில், நேற்று (13) பதிவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## இருக்கும் அதிகாரத்தையே ஜனாதிபதி பயன்படுத்தினார்



பாராளுமன்ற கூட்டத்தொடரை நேற்று முன்தினம் (12) நள்ளிரவுடன் ஒத்திவைப்பது தொடர்பில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட தீர்மானம், அவசர தீர்மானம் இல்லையெனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் சகல ஜனாதிபதிகளும் அந்த அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளனர் என்றும் அது அரசியலமைப்பு ஊடாக நேரடியாகவே ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும் என்றா

தொடர்ச்சி P2

## சிங்கப்பூருக்கு ஜனாதிபதி பயணம்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூருக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டே ஜனாதிபதி, சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. அவர், எப்போது நாடு திரும்புவார் என்பது தொடர்பிலான தகவல்கள் வெளியாகவில்லை.

இந்நிலையில், ஏற்கெனவே, பெற்றுக்கொண்ட மருத்துவ சிகிச்சை தொடர்பிலான மேலதிக பரிசோதனைகளை செய்துகொள்வதற்கே ஜனாதிபதி, சிங்கப்பூருக்குப் பயணமாகியுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சாணக்கியனுக்கு சவால் விடுத்து

## விவாதத்துக்கு அழைக்கிறார் நஸீர் அஹமட்





■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை பகிரங்க விவாதத்துக்கு அழைப்பதாக சவால் விடுத்து, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமட் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இ.மி.சவுக்கு இன்று சுகவீனம்

### தபால் சங்கமும் நேற்று ஆரம்பித்தது

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களும் இன்று (14) சுகவீன விடுமுறை போராட்டத்துக்குத் தயாராகி உள்ளதாகவும் எதிர்ப்புப் பேரணியொன்றும் இன்றையதினம் நடத்தப்படும் எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

## நத்தாருக்கு மதுபான அனுமதி இல்லை

கிறிஸ்மஸ் தினத்தை இலக்காகக் கொண்டு, சாதாரண ஹோட்டல்கள் அல்லது உணவகங்களுக்கு மதுபானங்களை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என மதுவரித் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். சுற்றுலா சபையால் அங்கிகரிக்கப்பட்ட ஹோட்டல் அறைகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரமே கிறிஸ்மஸ் தினத்தன்று

தொடர்ச்சி P2

### ரயில் நிலைய அதிபர்களின்

## தொழிற்சங்க நடவடிக்கையால் ரயில்களும் தாமதிக்கும்



ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இன்றையதினம் (14) ரயில்கள் தாமதமாகச் செல்லும் என சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்று (13) கருத்து தெரிவித்த அவர், தொழிற்சங்க நடவடிக்கையின் போது ரயில்களுக்கு வேகத்தடை உத்தரவு வழங்கப்பட மாட்டாது.

தொடர்ச்சி P2

## கணவனுக்கு நீதியை பெற்றுத் தாருங்கள்

### மலேசியாவில் அடித்துக் கொல்லப்பட்டவரின் மனைவி உருக்கம்



■ வா.கிருஸ்ணா

மலேசியாவில் 06-09-2020 அன்று அடித்துக் கொல்லப்பட்ட தனது கணவனான கணபதிப்பிள்ளை விவேகானந்தனுக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென அவரது மனைவி பிருந்தாஜினி விவேகானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

### சு.க உறுப்பினர் மீது

## ஆளுங்கட்சி உறுப்பினர் தாக்குதல்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

மஸ்கெலியா பிரதேச சபையின் உபதவிசாளரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மஸ்கெலியா தொகுதி ஒருங்கிணைப்பாளருமான பெரியசாமி பிரதீபன், நேற்று (13) காலை ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார். பிரதேச சபையின் தவிசாளர் கோவிந்தன் செண்பகவள்ளி தலைமையில் சபை அமர்வு நேற்று ஆரம்பிக்கப்பட்ட போது, மஸ்கெலியா நகரில் சட்டவிரோ

தொடர்ச்சி P2


## 'பொடி லசி' நீதவான் முன் ஆஜர்படுத்தப்படுவார்

### மேன்முறையீட்டு நீதிமன்றில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

தடுப்புக்காவல் உத்தரவு முடிவடைந்தவுடன், 'பொடி லசி' என அழைக்கப்படும் பாதாள உலக பிரமுகர் ஜனித் மதுஷங்கவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸ்மா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று (13) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## 60 கர்ப்பிணிகளை கொரோனா கொன்றது



கொரோனா தொற்றின் முதலாவது அலையிலிருந்து இன்று வரை இலங்கையில் 10,500 கர்ப்பிணிகள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்த விசேட வைத்தியர் சித்ரமாலித சில்வா,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்

இதன்படி, பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வு எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதவிக்காலம் முடிவடைவது என்பது பாராளுமன்றத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பதாகும். ஆனால், சபாநாயகர் அந்தப் பதவியில் நீடிப்பார்.

புதிய அமர்வின் தொடக்கத்தில் தெரிவுக்குழு மீண்டும் கூட்டப்பட வேண்டும் மற்றும் உயர்தரங்களுக்கான குழு அதன் பதவிக்காலம் முடிந்த பின்னரும் தொடர்ந்து செயற்படும்.

பதவிக்காலம் முடிந்ததும் புதிய அமர்வை ஜனாதிபதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்க வேண்டும். பாராளுமன்ற அமர்வுகள் முடிவடைந்தவுடன், பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு, நிலையியல் கட்டளைக் குழு, பொது நிறுவனங்களுக்கான குழு, பொதுக் கணக்குக் குழு உள்ளிட்ட குழுக்களின் செயற்பாடுகள் தானாகவே செயலிழந்துவிடும்.

புதிய அமர்வு ஆரம்பமானவுடன் குழுக்கள் மீள நியமிக்கப்பட வேண்டுமென பராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், புத்தாண்டுக்கான அமர்வு, ஜனவரி 11ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையிலேயே ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஜனவரி 18ஆம் திகதிவரையிலும் ஒத்திவைத்துள்ளார்.

# புதிய கூட்டத்தை ஜனாதிபதி ஆரம்பிப்பார்

பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்படும்போது பாராளுமன்றத்தால் முறையாக பரிசீலனை செய்யப்படாத வினாக்கள் மற்றும் பிரேரணைகள் இரத்தாவதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அவை தொடர்பில் நிலையியல் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் விசேட குழுக்கள் (தெரிவுக் குழு) தவிர்ந்த ஏனைய குழுக்கள் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.

இதற்கமைய கடந்த 09ஆம் திகதி பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய ஜனவரி மாதம் 11ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு இடம்பெறாது என்பதுடன், ஜனவரி 18ஆம் திகதி புத்தாண்டுக்கான பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகும்.

## இருக்கும் அதிகாரத்தையே...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்:

1978ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையின் அனைத்து ஜனாதிபதிகளும் இந்த அதிகாரத்தை பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

அரசியலமைப்பின் 70ஆவது உறுப்புரையின் முதலாவது உப உறுப்புரையின் கீழ், பாராளுமன்றத்தைக் கலைக்க, கூட்டுவதற்கு, இறுதி அமர்வை நிறைவு செய்ய அவருக்கான அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

எனினும் புதிய அமர்வு இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஜனவரி மாதம் வெளிநாட்டு கடனை செலுத்தவிருப்பதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் உண்மையல்லை என்றும் இதற்கும் பாராளுமன்றத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றார்.

இலங்கை செலுத்த வேண்டிய கடன், வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். இதனுடன் பாராளுமன்ற அமர்வு எவ்விதத்திலும் தொடர்புபடவில்லை எனவும் தெரிவித்தார்.

## இ.மி.சவுக்கு இன்று சுகயீனம்

அதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 23 தபால் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று (13) மாலை 4 மணி முதல் இன்று நள்ளிரவு வரை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் தெரிவித்தது.

நிர்வாகத்தின் சட்டவிரோதம், ஊழல், தன்னிச்சையான நடவடிக்கைகளால் இலங்கை மின்சார சபை மேலும் பாதாளத்துக்கு செல்வதாக மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஊழியர்களையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் வகையில் தாம் முன்வைத்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதே நாளைய தொழிற்சங்க நடவடிக்கையின் நோக்கம் என தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை, தபால் திணைக்களத்தின் ஊழியர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக சங்கத்தின் அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தபால் ஊழியர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தபால் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் தபால் அமைச்சின் செயலாளருக்கும் இடையில் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், நேற்று (13) காலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் தோல்வியடைந்ததன் காரணமாகவே பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

## முறைகேடுகளை மறைக்கவா ஒத்திவைப்பு

குறிப்பாக அரசாங்கத்தின் பல முறைகேடுகள் தொடர்பில் கோப் குழுவின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இந்த இடைநிறுத்தம் சர்ச்சைக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார். யுகதனவி மின்நிலையம் போன்ற ஒப்பந்தங்களின் உண்மைத் தன்மை வெளிப்பட்டு வரும் வேளையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை சர்ச்சைக்குரியது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மறுத்தார் கப்ரால்

இது நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தும் என்றும் எதிர்க்கட்சிகளின் தவறான பிரசாரத்தின் ஒரு பகுதி என்றும் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்று திங்கட்கிழமை (13) நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

நாட்டின் அந்நியச் செலாவணி மற்றும் நாணயக் கையிருப்பு நிலைவரம் தொடர்பில் விசாரிப்பதற்காகவே இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், தனிப்பட்ட விஜமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று (13) அதிகாலை சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொழிற்சங்க நடவடிக்கையால்...

மேலும், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கத் தவறியதன் காரணமாக, எதிர்வரும் டிசெம்பர் 26ஆம் திகதி முதல் தொழிற்சங்கம் தமது அனைத்து சேவைகளிலிருந்தும் விலகிக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ரயில்வே முகாமைத்துவம் நேற்று (13) கோரிய கலந்துரையாடலையும் புறக்கணிக்க தொழிற்சங்கம் தீர்மானித்திருந்தது.

நாங்கள் ரயில்வே திணைக்களத்துடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தினோம், ஆனால் பேச்சுவார்த்தை எமது கோரிக்கைகளை நிறைவேற்ற வழிவகுக்கவில்லை. எனவே, கலந்துரையாடலில் பங்கேற்பதை தவிர்க்க தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது என்றார்.

## 'பொடி லசி' நீதவான்...

பொடி லசியின் விளக்கமறியல் உத்தரவு டிசெம்பர் 15ஆம் திகதியுடன் நிறைவடையும் எனவும் அதன் பிரகாரம் அவரை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் சட்டமா அதிபர் ஊடாக பொலிஸ் மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான மொஹமட் லபார்ஜ், சு.பி. கரலியத்த ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இதனை மன்றுக்கு அறிவித்தார்.

அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் மன்றுக்கு அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, குறித்த மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட மனு பெப்ரவரி 9ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

## கணவனுக்கு நீதியை பெற்றுத்தாருங்கள்

மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தனது மகனுடன் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

பாகிஸ்தானில் அண்மையில் அடித்து, எரியூட்டிக் கொல்லப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளரின் படுகொலைக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்த அவர், இதேபோன்று தனது கணவனும் அடித்துக்கொலை செய்யப்பட்டிருந்தபோதிலும் அதற்கு எதிராக யாரும் பேசுவதற்கு கூட முன்வரவில்லையெனவும் அவர் கவலை தெரிவித்தார்.

எனது கணவன் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பில் எனக்கு எந்தவிதமான உதவியோ, நீதியோ கிடைக்கவில்லை. பாகிஸ்தானில் கொல்லப்பட்ட சகோதருக்கு ஆதரவாகப் பலர் குரல்கொடுத்துள்ளனர். ஆனால், எனது கணவருக்கு ஆதரவாக யாரும் ஏன் குரல்கொடுக்க முன்வரவில்லையென்ற கேள்வி எனக்குள் எழுந்துள்ளது என்றார்.

நான், இங்கு இனவாதம்பேசவில்லை. பாகிஸ்தானில் கொல்லப்பட்டவர் ஒரு சிங்களவர் என்ற அடிப்படையிலா அனைவரும் குரல்கொடுத்தார்கள். நான் வறுமை நிலையிலுள்ள பெண் என்ற காரணத்தால் எனக்கு ஆதரவு வழங்க முன்வரவில்லை என்றும் வினவினார்.

எனது கணவருக்கு ஏற்பட்ட அநீதிக்கு எனக்கு நீதி கிடைக்கவேண்டும். அன்று எனக்கு ஆதரவினை வழங்கியிருந்தால், பாகிஸ்தானில் அந்த அண்ணாவுக்கு எதுவும் நடந்திருக்காது. அன்று அதற்கான நடவடிக்கையினை எடுத்திருந்தால் இலங்கையினை சேர்ந்த எவரையும் தொடுவதற்கு அச்சப்பட்டிருப்பார்கள் என்றார்.

பாகிஸ்தானில் இடம்பெற்ற சம்பவத்துக்கு பாகிஸ்தான் அரசாங்கம் மன்னிப்புக்கூட கேட்டுள்ளது. ஆனால், எனக்கு எந்தவிதமான ஆதரவும் கிடைக்கவில்லை. எனது கணவனை கொலைசெய்தவர்கள் யார் என்பது கூட தெரியாத நிலையுள்ளது. எனது கணவனின் படுகொலைக்கு எனக்கு நீதிவேண்டும். எனக்கு வழங்கப்படும் நீதியானது இலங்கையின் ஒவ்வொரு பெண்ணுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்கும் என்றார்.

இலங்கையரை தொட்டால் இலங்கையே துடிக்கும் என்ற அச்சம் ஏனைய நாடுகளில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். எனது கணவன் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில், இலங்கை ஜனாதிபதிக்கும் நான் கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் யாரும் எந்த உதவியும் செய்யவில்லை. இந்நிலையில், எனது கணவனின் கொலைக்கு இலங்கை அரசாங்கம் எனக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## விவாதத்துக்கு அழைக்கிறார் நஸீர் அஹமட்

அந்த அழைப்புக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது "ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களுக்கும் காணிப்பிரச்சினை இல்லை. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள், பிள்ளையானுடன் சேர்ந்து காணிப்பிரச்சினை தொடர்பில் நாடகம் ஆடுகிறார்கள்" என்று தாங்கள் தெரிவித்த கருத்துகள் தொடர்பிலேயே உங்களுடன் பகிரங்க விவாதத்தை நடத்த நான் தயாராக இருக்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகளுக்கு நடைபெற்ற நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அநீதிகள் குறித்தும் சட்டத்துக்கு முரணாக முஸ்லிம் பிரதேச செயலகங்களின் காணி எல்லைகள் கபளீகரமாக பறிக்கப்பட்டது தொடர்பிலும் அரச அதிகாரிகள் சிலர் முஸ்லிம் பிரதேசங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் மேற்கொண்ட ஓரவஞ்சனை யான செயற்பாடுகள், முஸ்லிம்கள் இழந்த காணிகள் இழந்த கிராமங்கள், முஸ்லிம் பிரதேச காணிகள் கபளீகரம் செய்யப்பட்டமை தொடர்பிலுமே உங்களுடன் பகிரங்க விவாதம் ஒன்றை நடத்த இந்த அழைப்பு விடுக்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மாவட்ட முஸ்லிம்களுக்கு காணி தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளை இந்நாட்டு மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய தேவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் குறித்து உங்களுடைய அறியாமையை உங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் இது தொடர்பாக திறந்தவெளியில் உங்களுடன் விவாதிக்கும் வகையில், உங்களது சம்மதத்தை நான் எதிர்பார்ப்பதுடன் அதற்குரிய இடம் பொருத்தமான நேரம் தொடர்பில் இருவரும் கலந்தாலோசித்து இந்தப் பகிரங்க விவாதத்தை நடத்த வேண்டும் என வேண்டுகின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 60 கர்ப்பிணிகளை...

இவர்களுள் 60 கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளனர். அவ்வாறு உயிரிழந்த அனைவரும் மூன்றாவது அலையிலேயே உயிரிழந்தனர். சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஆனால், தற்போது தொற்றுக்குள்ளாகும் கரப்பிணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதால் இதில் குறைவு காணப்படுகின்றது.

அதேபோல் 30 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகளுக்கு பூஸ்டர் தடுப்பூசியை தற்போது செலுத்திக்கொள்ள முடியும். தடுப்பூசி செலுத்திக்கொண்டாலும் தொற்றிலிருந்து முழுமையான பாதுகாப்பு கிடைத்து விடுமென கருதாமல் சுகாதார வழிகாட்டல்களை கடைபிடிப்பது அவசியம். மேலும் தொற்றால் இதுவரை 89 சிறுவர்கள் மரணமடைந்துள்ளதுடன், இவர்கள் அனைவரும் 18 வயதுக்கு குறைந்தவர்கள் என்றார்.

## நத்தாருக்கு மதுபான...

மதுபானங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இது இவ்வருடம் மட்டுமன்றி இதற்கு முன்னரும் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிறிஸ்மஸ் தினத்தில் மதுபானங்களை விநியோகிப்பதற்கு அனுமதி கோரி சுற்றுலா ஹோட்டல்கள், உணவகங்களில் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு வருவதாகவும், இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆளுங்கட்சி...

தமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, ஆளுங்கட்சியின் உறுப்பினர் எஸ்.ஏ. திஸாநாயக்கவால் கண்ணாடி குவளையால் தாக்கப்பட்டதாக உபதவிசாளர் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இதன்போது தனது கண் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ள நிலையில், குறித்த இருவருக்குமிடையிலான மோதலையடுத்து, சபை அமர்வுகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தாக்குதலை மேற்கொண்ட பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.ஏ. திஸாநாயக்கவிடம் வினவியபோது, மஸ்கெலியா பிரதேச சபையில் தமது கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்குச் செல்லும் வீதியை புனரமைக்க, சபையில் அனுமதியைப் பெற்று அந்தப் பணிகளை முன்னெடுத்த போது, பெரியசாமி பிரதீபன் இந்த வீதி புனரமைப்புக்கு எதிரானவர்களுக்கு ஆதரவு தெரிவித்ததுடன், சபையில் அமைதியின்மையுடன் செயற்பட்டார்.

பின்னர் சபையிலிருந்து மற்றுமோர் உறுப்பினர் ஒருவரைத் தாக்க முயற்சித்ததாகவும் இதனைத் தடுக்க முற்பட்ட போதே, தனது கையிலிருந்த கண்ணாடி குவளையால் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தில்

# நாடு விழும்

## நளின் பண்டார எம்.பி எச்சரிக்கை

எஸ்.கணேசன்

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாடு அதாள பாதாளத்திற்குள் விழும் நிலை உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார எச்சரித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுமானால், அதற்கு தற்போதைய அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - வலப்பனையில் நேற்று (13) விவசாயிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"சரியான விவசாய ஆலோசனைகளை வழங்க முடியாதவர்களே ஜனாதிபதியுடன் உள்ளனர். சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள்




அல்ல. ஆனால், இது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையே தவறானது என்கிறோம். தற்போது அவர்கள் இது தொடர்பில் பிறப்பித்த வர்த்தமானி முன்பு போல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனினும் பெரும்போகச் செய்கை தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேலும், அப்படியானால் நெல் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பூச்சியமாக மாறும். மரக்கறி உற்பத்தியும் அப்படித்தான். விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. தேயிலை உற்பத்தியும் அவ்வாறுதான். எமது தேயிலை வெளிநாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனவே, இவர்களின் செயற்பாடுகளால் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.. இதற்கு ஜனாதிபதியுடன் இருக்கும் ஒரு சில மனநலம் குன்றியவர்களின் ஆலோசனைகளே காரணமாகும்.

எனவே, எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆகவே எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தற்போதைய அரசாங்கம் வெடித்து சிதறும் என்பதே உண்மை என்றார்.

# இந்திய எக்ஸிம் வங்கியின் குழு இலங்கைக்கு விஜயம்



பொல்ஹாவெல, அளுத்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் மூவர் கொண்ட குழு இலங்கைக்கு வருகைத்தந்துள்ளது.

தேசிய ஏற்றுமதி காப்புறுதி கணக்கின் கீழான கடன் வசதிகளின் கீழ், இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதேவேளை, இந்தக் குழு இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லேவை சந்தித்து இத்திட்டங்களின் முன்னேற்றம், அவர்களின் வருகை குறித்து விளக்கமளித்துள்ளனர்.

இதேவேளை இக்குழு அளுத்கம, பொல்கஹவெல ஆகிய இடங்களில் உள்ள திட்டங்களைப் பார்வையிட்டு, அவற்றை மதிப்பீடு செய்துள்ளதோடு ஒப்பந்ததாரர்களுடன் கலந்துரையாடி உள்ளனர்.

# தூதுவர்களுடன் பிரதமர் விசேட சந்திப்பு





இலங்கைக்கான தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசேட சந்திப்பொன்றில் நேற்று முன்தினம் (12) ஈடுபட்டுள்ளார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு வெளிவிவகார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட இரவு விருந்துபசார நிகழ்வின்போதே இந்த விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த இரவு விருந்துபசார நிகழ்வில் பிரதமர், பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட இராஜதந்திர சேவையின் சிரேஷ்ட அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

# கழிவறை குழிக்குள் விழுந்து சிறுமி உயிரிழப்பு

ஜூட் சமந்த

கழிவு நீர் நிரம்பி, பாதுகாப்பாற்ற நிலையில் இருந்த கழிவறை குழியில் விழுந்த சிறுமி, உயிரிழந்துள்ளதாக ஆரச்சிகட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆரச்சிகட்டு, வெலிபெலெஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 05 வயதுடைய சிறுமியே ஞாயிற்றுக்கிழமை (12) இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

விளையாடிக்கொண்டிருந்த சிறுமியைக் காணவில்லையென பெற்றோர், தேடிவந்த நிலையில், அரைவாசி கட்டப்பட்ட கழிவறை குழியிலிருந்து சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

உடனடியாக சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்திருந்தபோதிலும், சிறுமி ஏற்கெனவே, உயிரிழந்து விட்டாரென்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அம்பியூலன்ஸ்களுக்கு

# கட்டணம் இல்லை

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் அனைத்து அம்பியூலன்ஸ் வண்டிகளிடம் நெடுஞ்சாலைகளுக்குரிய கட்டணம் அறவிடப்பட மாட்டாதென, நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

அரச, தனியார் வைத்தியசாலைகளின் அம்பியூலன்ஸ் வண்டிகளிடம் கட்டணம் அறிவிடப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கட்டணம் அறிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்று காரணமாக, நாட்டு நிலைமையை



கருத்திற்கொண்டு அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் அனைத்து அம்பியூலன்ஸ்களிடம் கட்டணம் அறிவிடுவதை கடந்த மே மாதம் 20 ஆம் திகதி முதல் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு உதவுவதை சர்வதேசம் நிறுத்திவிட்டது



நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதே பொருத்தமானது என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு மாற்றுவழியாக சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று கலந்துரையாடி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவுவதை நிறுத்தியுள்ளன. குறிப்பாக இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்காத நிலையொன்றே காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்று கலந்துரையாட வேண்டும். எவ்வாறாயினும் அவர்கள் சில நிபந்தனை அடிப்படையிலேயே உதவுவதற்கு முன்வருவார்கள் எனவும் கூறினார்.

# இரு சிறுவர்கள் காணவில்லை


## கண்டால் பொலிஸூக்கு அறிவிக்கவும்

கொடதெனியாவ, பாந்துரகொட பிரசேத்தில் காணாமல்போன இரு சிறுவர்களை கண்டறிவதற்குப் பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

10 வயதுடைய திஸாநாயக்க முதியன்செலாகே கவிஷ சந்தகெலும், 12 வயதுடைய ஜயசேகர முதலிகே அகில தேதுனு ஆகிய இருவரும் காணாமல் போயுள்ளதாகப் பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போயுள்ள இந்தச் சிறுவர்கள் தொர்பில் தகவல்கள் கிடைத்தால் கீழ்கண்ட தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத்தருமாறும்





பொதுமக்களிடம் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

கொடதெனியாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 0718591634, கொடதெனியாவ பொலிஸ் நிலையம் 0332240050, 0332272222 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொண்டு தகவல்கள் வழங்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயு நிறுவனங்களே பொறுப்பு



லேபல் உடைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட காஸ் சிலிண்டர்களிலும் தரக்குறைவான சமையல் எரிவாயு இருக்குமாக இருந்தால் அதனையும் குறித்த சிலிண்டர் நிறுவனங்கள் மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்களுக்கு முகங்கொடுத்துள்ள அனைவருக்கும் குறித்த சமையல் எரிவாயு நிறுவனங்கள் பொறுப்புக்கூற வேண்டும். லேபல் உடைக்கப்படாத காஸ் சிலின்டர்களை மாத்திரம் மீளப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சிலிண்டர்களால் ஏற்பட்ட விபத்து சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்க வேண்டும். இது தொடர்பில் அமைச்சரவையில் நாம் பேசுவோம். அப்பாவி மக்கள் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை. சிலிண்டர் நிறுவனங்களே இதற்குப் பிரதானமாகப் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் கூறினார்.

**“ சிலிண்டர்களால் ஏற்பட்ட விபத்து சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்க வேண்டும். இது தொடர்பில் அமைச்சரவையில் பேசுவோம். மக்கள் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை**

வத்தளை கடலில் மூழ்கி

# மாணவர்கள் இருவர் பலி

வத்தளை, பிரீத்திபுர கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்த இரு பாடசாலை மாணவர்களின் சடலங்களை கடற்படை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பாடசாலை மாணவர்கள் கடலில் நீராடிக் கொண்டிருந்த போது, அவர்களில் இருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

கடற்படையின் சுழியோடிகள், பிரதேசவாசிகள் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இரு மாணவர்களின் சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன

உயிரிழந்தவர்கள், கே.கே. ருவிந்த புன்சரா (15), வை. எம். சஞ்சிதா சந்தகெலும் (15) என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் மஹர குமார வித்தியாலயத்தைச் சேர்ந்த 10 வயதுடைய இரண்டு மாணவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேவை

வெளிநாட்டவர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 072-7000200

அரசாங்கம் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி

# தீர்மானங்களை எடுப்பதில்லை

எஸ்.கணேசன்

அரசாங்கம் பங்காளி கட்சிகளுடன் கலந்துரையாடி எந்தவித முடிவுகளையும் எடுப்பதில்லை என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.

தலவாக்கலை, அக்கரபத்தனை பகுதியில் நேற்றுமுன்தினம் (12) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.


தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "மஹிந்த ராஜபக்ஷ ஜனாதியாக இருந்த போது எம்முடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்தார். ஆனால், அவ்வாறான நடைமுறையை நடப்பு

**“ மஹிந்த ராஜபக்ஷ ஜனாதியாக இருந்த போது எம்முடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்தார். ஆனால், அவ்வாறான நடைமுறையை நடப்பு அரசாங்கத்தில் காண முடியவில்லை. அதனால், அரசாங்கத்தில் உள்ள குறைப்பாடுகளைச் சுட்டிக்காட்ட எம்மால் முடியாமல் உள்ளது**

அரசாங்கத்தில் காண முடியவில்லை. அதனால், அரசாங்கத்தில் உள்ள குறைப்பாடுகளைச் சுட்டிக்காட்ட எம்மால் முடியாமல் உள்ளது" என ஆதங்கப்பட்டார்.

தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரம் சரிவை நோக்கி பயணிக்கின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் சிரமப்படுகின்றனர். இவ்வாறான பல பிரச்சினைகள் உள்ளன

இவை தொடர்பில் கதைக்க எமக்கு சந்தர்ப்பமில்லாமல் உள்ளது. உறுதியளித்தபடி அமைச்சரவையில் எனக்கு எந்தவித பொறுப்பும் வழங்கப்படவில்லை. நான் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே. ஆகவே அமைச்சரவையில் எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனை வழங்கவும் முடியாதுள்ளது.




மக்கள் சிரமத்திற்குள் விழுவதை தடுக்க என்னிடம் பல யோசனைகள் உள்ளன. கொவிட்-19 சமூகத்தில் பரவலடையும் போது, அதனை தடுக்க பிரத்தியேக வேலைத்திட்டம் ஒன்றை அமலாக்க வேண்டும். அது தொடர்பான எனது ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனது ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருக்குமானால் நிலைமை கடினமாய் இருந்திருக்காது எனவும் தெரிவித்தார்.



மட்டக்களப்பு

# வெள்ளக்காடானது

■ வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக, குளங்கள் பலவற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதோடு, வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்து வருவதால் அப்பகுதிகளில் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, படுவான்கரைப் பிரதேசத்தின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதி, நாணமடு- மாலையர்கட்டு



பிரதான வீதி, ஆனைகட்டியவெளி-சமிளையடி வீதி உள்ளிட்ட பல வீதிகளை ஊடறுத்து, வெள்ளம் பாய்ந்து வருகிறது. இதனால் இந்த வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள், மிகுந்த அசௌகரியங்களையும் ஆபத்துகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில, நேற்று (13) காலை 8.30 மணிவரையில் 78.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி சு.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

# 16 எறிகணை குண்டுகள் மீட்பு



■ எம்.எம்.அஹமட் அனாம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் குடும்பிமலைக்குத் தெற்கே மயிலத்தமடு எனுமிடத்திலிருந்து சக்திவாய்ந்த 81 ரக எறிகணைக் குண்டுகள் 16, ஞாயிற்றுக்கிழமை (12) விசேட அதிரடிப்படையால் மீட்கப்பட்டுள்ளன. வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய விசேட அதிரடிப்படையுடன் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மீட்கப்பட்ட குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையை வாழைச்சேனை விஷேட அதிரடிப் படையினர் மேற்கொண்டனர்.

மேலும், இவ்வாறான குண்டுகள் மற்றும் வெடிக்கும் பொருட்கள் தொடர்பில், பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும், அது பற்றிய தகவல்களை அருகிலுள்ள பாதுகாப்புத் தரப்பினருக்கு அறியத்தருமாறும் பாதுகாப்பு தரப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.




மட்டக்களப்பில்

# விழிப்புணர்வு நிகழ்வு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன், வ.சக்தி

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும் தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'மனித உரிமையும் ஊடக சுதந்திரமும்' எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்பு நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (12) மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவிலாளர்கள், கொழும்பிலிருந்து வருகை தந்த தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது, இணைய வழி ஊடகவியலாளர்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும், ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும்இணைய தொழில்சார் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் பெடி கமகே எடுத்துரைத்தார்.

# விழிப்புணர்வு நிகழ்வு

திருகோணமலை நகரில் உள்ள மனையாவெளி பிரதேச மீனவர்களின் வலையில் ஞாயிற்றுக்கிழமை (12) இரவு சுமார் 600 கிலோ கிராமுக்கு அதிகமான நிறையைக் கொண்ட, ஆணை திருக்கை மீன் பிடிபட்டதென மனையாவெளி பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்

கடல் சீற்றம் காரணமாக, சமீபகாலமாக மீன் பிடித்தொழிலில் கடுமையான சரிவைக் கண்டிருந்த நிலையிலே ஆணை திருக்கை மீன் பிடிபட்டுள்ளது.

குறித்த மீனின் பெறுமதி கணிக்கப்பட்டு, விற்பனை செய்வதற்கு மீனின் உரிமையாளர் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. மேலும், ஆணை திருக்கை மீன் மேற்படி பிரதேச கடலில் பிடிபடுவது அபூர்வமானதென தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொத்துவிலில்

# இரத்த தானம்

■ றியாஸ் ஆதம்

இரத்த வங்கியில் நிலவும், குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரின் வேண்டுகோளுக்கிணங்க, இராணுவத்தின் 242ஆவது படைப்பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு, கோமாரி பிரதேசத்தில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் குறித்த படைப்பிரிவின், கட்டளை அதிகாரி பிரிகேடியர் டீ.சி. பீரிஸ், சிவில் விவகார அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஜானக விஜயரத்ன, வைத்தியர் டீ.என்.எம். தர்மதிலக, டொக்டர் எஸ். பெர்னான்டோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், இராணுவ வீரர்கள் என 74பேர் இரத்த தானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஒருமித்த தீர்மானம் என்று முடிசூட்டுவதை

# நிறுத்துங்கள்

குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதைத் தயவு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும் என, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து, அவர், நேற்று (13) விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ஒரு சில கட்சிகள் ஒன்று சேர்ந்து எடுத்திருக்கும் முடிவு, தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதை நினைக்கும் பொழுது, வேதனையை தருகின்றது.

அந்நிய நாடுகளை அழுத்தத்தைப் பிரயோகிக்கச் சொல்லி கோருவது முட்டாள்த்தனமான செயற்பாடாகும். இதன் மூலம் உள்ளூர் அரசியல்வாதிகளையும்



பெரும்பான்மை இன கடும் போக்காளர்களையும் கோபமடைச் செய்யும் செயலாகும்.

அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள புரிந்துணர்வை சிதைக்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும்.

இலங்கை ஓர் இறைமையுள்ள நாடாகும். எந்த ஒரு நாடும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் தலையிடுவதை இலங்கையும் விரும்புவதில்லை. குறிப்பிட்ட நாடுகளும் இந்த விடயத்தில் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கும். இந்த விடயம் அனைத்து தரப்பினருக்கும் தெரிந்திருந்தும் மக்களை முட்டாள்களாக்குவது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம் ஆகும்.

எந்த ஒரு காலகட்டத்திலும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அனைத்துத் தரப்பினரும் கூறிய பின்பும் 'சமஷ்டியை பெற்றே தீருவோம்' என்று அறிக்கை விட்டு, மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அன்று தொட்டு இன்று வரை இந்திய முறையிலான ஓர் அரசியல் தீர்வையே முன்வைத்து வருகின்றது. இதற்கு மேலாக இந்தியாவும் எமக்கு எதையும் பெற்றுத்தரப் போவதில்லை. பெருமளவு சிங்கள மக்களும் அரசியல் தரப்பினரும் ஒரு காலத்தில் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் இன்று இலங்கையிடம் சமரசமாகப் பேசிப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கு

# ஜனாதிபதி ஆணைக்குழு விஜயம்



■ மு.தமிழ்ச்செல்வன்

உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, கிளிநொச்சிக்கு நேற்று (13) விஜயம் மேற்கொண்டது.

இதன்போது, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட தரப்புகளின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் கருத்துகள் பதிவு செய்யப்பட்டன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி, யாழ். மாநகர சபை உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்தனர்.








# அங்குரார்ப்பணம்...

முல்லைத்தீவு, கொக்குளாய் பகுதியில் இயங்கி வந்த கொக்குளாய் பொலிஸ் காவலரன், புதிய கட்டடம் அமைக்கப்பட்டு, பொலிஸ் நிலையமாக வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபரால், நேற்று (13) திறந்து வைக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சண்முகம் தவசீலன்)

சட்டவிரோத மதுபான உற்பத்தியை

# சட்டத்தால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை போன்றவற்றை சட்டத்தால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது எனத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட மதுவரி அத்தியட்சகர் கிருபாகரன், சமூகத்தின் ஒத்துழைப்பின் மூலமே முற்றுமுழுதாகக் கட்டுபடுத்த முடியும் எனவும் கூறினார்.

கிளிநொச்சியில், 'விழுது' அமைப்பின் ஏற்பாட்டில், சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு, இந்தச் சட்டங்களை மட்டும் பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியாது. சமூகத்தின் ஒத்துழைப்புகள், விழிப்புணர்வுகள் மூலமே கட்டுப்படுத்த முடியும் என்றார்.

கோந்தைப்பிட்டி கடற்பரப்பில்

# யாழ். மீனவர்கள் மாயம்; ஒருவர் சடலமாக மீட்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார், கோந்தைப்பிட்டி கடற்பரப்பில், ஞாயிற்றுக்கிழமை (12) காணாமல் போயிருந்த இரண்டு மீனவர்களில், இன்று காலை ஒரு மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பருத்தித்துறையை சேர்ந்த தர்ஷன் (வயது-19) என்பவரே, சடலமாக மீட்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது-28) என்ற இரண்டு பிள்ளையின் தந்தை காணாமல் போயுள்ள நிலையில், அவரை தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை, பருத்தித்துறையைச் சேர்ந்த மீன்பிடி தொழிலாளர்கள் மூவர், கோந்தைப்பிட்டி கடலில், தமது படகை செலுத்தி, தொழிலுக்குச் செல்ல சரி பார்த்துள்ளனர். இதன் போது, மூன்று மீனவர்கள் உள்ளடங்களாக 8 பேர் படகில் இருந்துள்ளனர். படகில் வெளி இணைப்பு இயந்திரத்தை இணைத்து, படகைச் செலுத்தியபோது, இயந்திரம் இயங்காத நிலையில் காற்றின் காரணமாகப் படகு கடலில் சென்று கொண்டிருந்தது. இதன்போது, படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர், திடீரென கடலில் விழுந்தார். அவர், கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டபோது, மற்றைய மீனவர் அவரை காப்பாற்ற கடலில் குதித்துள்ளார்.

எனினும், இருவரும் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டனர். ஏனையவர்கள் போராடியும் குறித்த இருவரையும் மீட்க முடியவில்லை. நீண்ட நேரத்தின் பின்னர், படகின் இயந்திரம் இயங்கத் தொடங்கிய நிலையில், கரை திரும்பி ஏனைய மீனவர்களின் உதவியுடன், காணாமல் போனோரை தேடியுள்ளனர்.

பள்ளிமுனை கடல் பகுதியில், சுமார் 5க்கும் மேற்பட்ட ஆற்று நீரோட்டங்கள் இருப்பதாகவும் இதில் ஏதாவது ஒரு நீரோட்டத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கும் என்றும், தெரிவிக்கப்படுகின்றது.

அதிபரை முழந்தாளிட வைத்த சம்பவம்:

# இணக்கப்பாடு எட்டப்பட்டது

## மூன்று வருடங்களின் பின்னர் தீர்வு

■ எம். செல்வராஜா

பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலய அதிபரை, ஊவா மாகாண முதலமைச்சரிடம் முழந்தாளிட வைத்த சம்பவம் தொடர்பான முறைப்பாடு, பதுளை இணக்கசபையில் நேற்று (13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இருதரப்பினருக்கிடையில் பூரண இணக்கப்பாடு ஏற்பட்டது.

ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தஸநாயக்க, 2018ஆம் ஆண்டில் பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலய அதிபர் பவானி ரகுநாதனை முழந்தாளிடுமாறு கோரியதான சம்பவம் இடம்பெற்றது.

முன்னாள் முதலமைச்சரின் ஆதரவாளரின் மகளை, பாடசாலையில் அனுமதிக்க, அதிபர் மறுத்தமையாலேயே, மேற்படி அதிபர் முழந்தாளிட்ட சம்பவம் இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டது.



இம்முறைப்பாடு தொடர்பில், பதுளை பொலிஸார், பதுளை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். நீதவானின் அறிவுறுத்தலுக்கமைய குறித்த முறைப்பாடு, பதுளை இணக்க சபைக்கு விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது.

**“அதிபர் தற்போது தனியாக்கப்பட்டார். இதனை அதிபரும் ஒப்புக்கொண்டுள்ளார். மனித உரிமை மீறல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கையும் அதிபர் வாபஸ் செய்வதாக உறுதியளித்துள்ளார். சந்தர்ப்பவாதக் கூட்டமொன்று, தம்மை தவறாக வழிநடத்தியுள்ளனர் என்றும் அதிபர் என்னிடம் கூறினார்**

இதனையடுத்து, இது தொடர்பான விசாரணை நேற்று (13) இணக்க சபையில் இடம்பெற்றதுடன், இதன்போது இருதரப்பினராலும் இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர பூரண இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க, “அரசியல் கட்சியின் தொழிற்சங்கமொன்றின் சிலர் இணைந்து, எனது அரசியல் செயற்பாடுகளுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், வித்தியாலய அதிபரை பயன்படுத்தி, எனக்கெதிரான போராட்டங்கள், பிரசாரங்கள் பல இடம்பெற்றிருந்தபோதிலும், நான் அவற்றைப்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை.

அதேபோல், அதிபர் தற்போது தனியாக்கப்பட்டார். இதனை அதிபரும் ஒப்புக்கொண்டுள்ளார். மனித உரிமை மீறல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கையும்அதிபர் வாபஸ் செய்வதாக உறுதியளித்துள்ளார். சந்தர்ப்பவாதக் கூட்டமொன்று, தம்மை தவறாக வழிநடத்தியுள்ளனர். தன்னையும் கஷ்டத்தில் விட்டுவிட்டனர் என்றும் அதிபர் என்னிடம் கூறினார்” என்றார்.

அக்கரப்பத்தனையில் 42 பிரிவுகளைச் சேர்ந்த

# தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

■ துவாரகஷன்

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் 12 தோட்டங்களை கொண்ட 42 பிரிவுகளை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், நேற்று (13) காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கட்சி பேதமின்றி அனைத்து தொழிலாளர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பளம் பாரிய பிரச்சினையாக இருப்பதாகவும், தற்போது தேயிலை மலைகள் காடாகிக் கிடப்பதால் 20 கிலோ கிராம் கொழுந்து பறிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு, வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாள்களே வேலை வழங்குவதால் பெரும் சிரமத்திற்கு மத்தியில் நிம்மதியற்று வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் தமக்குச் சாதகமான பதிலை பெற்றுத் தருமாறு கோரியும், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் கட்டாயமாக வேண்டும் என வலியுறுத்தியும் தோட்டத் தொழிலாளர்கள் இந்தப் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்ததாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு தேயிலை தொழிற்சாலைகளும் மூடப்பட்டு தொழிற்சாலை நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மாணவன் மரணம்

■ சுமணசிறி குணதிலக

எலிக் காய்ச்சலுக்கு உள்ளாகி, மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 15 வயதான மாணவனொருவன் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர், எத்திமலை மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்பவர் என, வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தனபால ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவன் எலிக்காய்ச்சலுக்கு உள்ளாகி, 14 நாள்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் (12) உயிரிழந்துள்ளார்.

# கடையிலிருந்த கல்லாப்பெட்டி மாயம்

## லிந்துலை பொலிஸார் விசாரணை

■ பா.பாலேந்திரன்

லிந்துலை, இராணிவத்தை தோட்டத்திலுள்ள கடை ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை (12) மாலை திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளர் தெரிவிக்கையில், தலவாக்கலை நகரில் இருந்து பொருட்கள் வாங்கி வந்து, அதனை கடையில் அடுக்கி வைத்துவிட்டு, தனது அலைபேசியை சார்ஜ் போடுவதற்கு வீட்டின் உட்புறம் சென்று, மீண்டும் கடைக்கு வந்தபோது, கடை கல்லாப்பெட்டி 3,270 ருபாய் பணத்துடன் திருடப்பட்டுள்ளது என்றார்.

சம்பவம்தொடர்பில் உடனடியாக லிந்துலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் நேற்றைய (13) தினம் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததாக தெரிவித்துள்ளனர்.

# ஹட்டனிலும் நிறை குறைந்த பாண் விற்பனை

■ சுதத்.எச்.எம்.ஹேவா

கோதுமை மா விலை அதிகரிப்பையடுத்து, பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஹட்டனில் சில பேக்கரிகளில் நிறை குறைந்த பாண் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய 450 கிராம் நிறையுடைய பாண் 80 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டிய நிலையில், சில பேக்கரிகளில் 350 கிராம் நிறையுடைய பாண் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு நிறை குறைவான பாண் உற்பத்தி செய்யும் பேக்கரிகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நுகர்வோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கரப்பத்தனை பணிப்பகிஸ்கரிப்புக்கு

# நூரளையில் ஆதரவு

■ ஆ.ரமேஸ்

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் 12 தோட்டங்களை கொண்ட 42 பிரிவுகளை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், நேற்று (13) காலை முதல் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்புக்கு நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி ஆதரவு வழங்கியுள்ளனர்.

நுவரெலியா பிரதேச சபையின் சபை அமர்வு, தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (13) காலை நடைபெற்றது.

இதன்போது மேற்படி விடயம் குறித்து சபை தவிசாளர் வேலு யோகராஜ் விசேட பிரேரணையொன்றை முன்வைத்தார்.

இதற்கு அமைவாக, நுவரெலியா பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 23 உறுப்பினர்களில் 21 பேர் பிரேரணையை ஆதரித்தனர்.

# முன் பதிவின்றி ஐயப்பன் யாத்திரை

## நன்றி தெரிவித்தார் செந்தில்

ஒன்லைன் மூலம் முன் பதிவின்றி, நேரடியாக கடவுசீட்டை பயன்படுத்தி இலங்கையர்களுக்கு ஐயப்பன் யாத்திரை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக, சபரிமலை ஐயப்ப கோவில் தேவஸ்தானத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஐயப்ப பக்தர்களுக்கு ஒன்லைன் மூலம் முன் பதிவினை மேற்கொண்டு, யாத்திரை செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் குழுவாக ஐயப்பன் யாத்திரையை மேற்கொள்ளும் போது, குழுவின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் முழுமையாக பதிவை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையால் ஐயப்ப தரிசனத்தை மேற்கொள்ள சிரமம் ஏற்பட்டதோடு, சிலர் நிர்க்கதிக்குள்ளாகி இருந்தனர்.

தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று, ஐயப்ப கோவில் தேவஸ்தானத்தால் வெளிநாட்டவர்களுக்கு கடவுச் சீட்டினூடாக ஐயப்பன் யாத்திரையை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ வீதி போக்குவரத்து அதிகார சபை ஊழியர்களுக்கு

# சீருடைகள் வழங்கப்பட்டன

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ், இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சப்ரகமுவ மாகாணத்தில் 1,800 தனியார் பஸ் வண்டிகள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதுடன், குறித்த மாகாணத்தின் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ், நேரக் கண்காணிப்பாளர்கள் 115 பேர் சேவையாற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





பயிற்சி நெறி நிறைவு:

# மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி

■ பி.கேதீஸ்

ஹட்டன், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில், ஒரு வருட காலம் பயிற்சி நெறியை நிறைவு செய்து வெளியேறவுள்ள மாணவர்களுக்கான விளையாட்டு போட்டிகள், ஹட்டன் -டன்பார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி மற்றும் வதிவிட முகாமையாளர் விஜேசிங் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரஜா சக்தி நிகழ்ச்சி திட்ட பணிப்பாளர் பரத் அருள்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுபான்மைக் கட்சிகள் ஒரு குடையின் கீழிருப்பதே காலத்தின் தேவை

அரசியல்சார்ந்த கொள்கையில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் பொதுவான விடயங்களுக்காக ஓரணியில் திரண்டு நிற்கும்போது, கொள்கை, கோட்பாடுகளுக்கு எவ்விதமான பாதங்களும் ஏற்படாது. ஓரணியில் திரண்டிருப்பதன் ஊடாக, கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க முடியுமென்பதே யதார்த்தபூர்வமான உண்மையாகும்.

'பயங்கரவாதிகளுக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கை' எனும் பெயரில், முன்னெடுக்கப்பட்ட இறுதி யுத்தத்துக்கு, பெரும்பாலான கட்சிகளால் ஆதரவளிக்க முடிந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவராக அன்றிருந்த முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கூடுதலான உறுப்பினர்களுடன் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தார். இங்கு, நாமெல்லாம் ஓரணியில் திரண்டிருகின்றோம் என்பது தெற்குக்குச் சொல்லப்பட்ட மிகப்பெரிய செய்தியாகும். ஆதலால், மக்களும் ஓரணியில் திரண்டனர்.

அதன்பின்னரான கருத்து முரண்பாடுகளை அடுத்து, இரண்டோர் உறுப்பினர்களுடன் தனது தாய்வீடான, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்துக்கு மீண்டும் திரும்பியிருந்தார் என்பது பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும்.

ஒரு கையை தட்ட இயலாது; ஆனால், கரங்கள் பல சேர்ந்தால், அதனூடாக எழுப்பப்படும் சத்தமும் அதிர்வுகளும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாய் இருக்கும். இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள், முற்றாகச் செயலிழந்து நிற்கின்றன. இதுதான், மக்களிடத்தில் நேரடியாகச் செல்லக்கூடிய மக்கள் பிரதிநிதிகளை கொண்டிருக்கும் மிகமுக்கியமான சபையாகும்.

வடகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன் பின்னர், இரண்டு மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட, கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தவர்கள் ஆட்சியமைத்தனர். வடக்கில், தமிழர் ஆட்சி நடைபெற்றது.

மாகாண சபையின் முறைமையின் கீழ், இவ்விரு மாகாணங்களைத் தவிர, ஏனைய மாகாணங்களில் வரப்பிரசாதங்கள் அனுபவிக்கப்பட்டன.

இந்நிலையில்தான், தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து, மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இது நல்லதோர் ஆரம்பம் என்றாலும், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல், தொடர்ச்சியாகக் கிடப்பில் போடப்பட்டிருப்பது ஒரு பொதுப் பிரச்சினையாகும். இதில், கட்சி, அரசியல், கொள்கை, கோட்பாடு, என்பவற்றை எல்லாம் புறந்தள்ளி வைத்துவிட்டு, மாகாண சபைத் தேர்தலுக்காக ஒரு குடையில் கீழ் ஒன்றுதிரண்டிருக்கலாம்.

ஆகக்குறைந்த அதிகாரங்களைக் கொண்டிருக்கும் மாகாண சபைக்கான தேர்தலில் கூட, தமிழ், முஸ்லிம் கட்சிகளிடத்தில் ஒன்றுமையில்லை என்பது, வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆக, ஆளும் கட்சியில் இருந்தாலென்ன, எதிர்க்கட்சியில் இருந்தாலென்ன, இந்தப் பொது விடயத்தின் போது, சிறுபான்மை கட்சிகள் ஓரணியில் திரண்டிருந்தால், அழுத்தம் திருத்தமாக அது அமைந்திருக்கும் என்பதே உண்மையாகும்.

பொது விடயத்தின் பொருட்டு அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நிமித்தம், ஓரணியில் திரண்டு நிற்பதற்குத் திராணியற்றவர்களாக இருந்தோமெனில், எதற்குமே கையேந்திக் கொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமையொன்றுதான் ஏற்படும் என்பதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எவருக்காவது வாக்குறுதி அளித்திருந்தால், அதிலிருந்து புரளக்கூடாது. சிலர் பேசுவது ஒன்று; செய்வது இன்னொன்று. அளித்த உறுதிமொழியைக் காற்றுடன் பறக்கவிட்டுவிடுவார்கள். சொல்லும் வார்த்தையில் உண்மை துலங்க வேண்டும்.

நியாய தர்மங்களில் இருந்து நழுவாது, செயலுருவில் காட்டினால், அவர்களின் வாழ்வு என்றும் வசந்தம். சில வாக்குறுதிகளை நினைத்தபடி செய்யமுடியாமலும் போகலாம். சூழ்நிலையால் இடையூறுகள் ஏற்பட்டாலும், முடிந்தவரை முயற்சி செய்வது நல்லது.

உதவிகேட்ட நபரிடம், நடந்துவிட்ட தவறுகளை, உள்ளபடி சொல்லிவிட வேண்டும். எவரையும் காத்திருக்க வைக்கலாகாது. மன்னிப்புக் கேட்டுவிடுவதால் மனப்பாரமும் குறைந்துவிடும்.

இன்றைய காலத்தில், வேலை பெற்றுத்தருகின்றேன் எனக்கூறி ஏமாற்றுபவர்களைப் பற்றி, பலரும் அறிந்த விடயம். யோசிக்காமல் உறுதி வழங்கலாகாது. உங்கள் சக்திக்கு உட்பட்டு, செய்யக்கூடியவற்றுக்கு மட்டும் உறுதி வழங்கவேண்டும். பேச்சிலும் செயலிலும் நாணயம் வேண்டும். ஒரே சொல்; அதுவே மந்திரம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம்களின் நிலைப்பாட்டையே தலைவர்கள் முன்வைக்க வேண்டும்

**மொஹமட் பாதுஷா**

ஒரு சமூகத்தின் தலைவர்கள், அந்தச் சமூகம் சார்ந்த விடயங்களை, இரண்டு விதங்களில் முன்கொண்டு செல்ல முடியும்.

முதலாவது, மக்களின் கருத்தறிந்து அதன்படி, நிலைப்பாடுகளையும் தீர்மானங்களையும் எடுத்தல்.

இரண்டாவது, எடுக்கின்ற தீர்மானங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தி, அதற்கான ஒப்புதலைப் பெறுவதாகும்.

தமிழர் அரசியலில், இந்தப் போக்கை பெருமளவுக்குக் காணலாம். ஆனால், முஸ்லிம்களுக்கான அரசியலில் மட்டும், இந்த அடிப்படைப் பண்பியல்பை காணக் கிடைப்பதில்லை.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், அபிலாஷைகளை முன்னிறுத்தி, அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானங்களை எடுப்பதும் இல்லை; அரசியல் நகர்வுகளைச் செய்வதும் இல்லை. அதேபோல், தாம் எடுக்கின்ற முடிவுகளின் பின்னாலுள்ள நியாயங்களை, மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் கிடையாது.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ஒன்று, அரசியல் தலைவர்கள், தங்களைப் பெரும் மேதைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றமை.

இரண்டாவது, மக்கள் முட்டாள்கள், அவர்களைப் பேய்க்காட்டலாம் என்ற நம்பிக்கை.

மூன்றாவது, தாம் ஏமாற்றப்படுவதற்கு எதிராக, முஸ்லிம் மக்கள் கிளர்ந்தெழாமை.

இவற்றின் காரணமாக, முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடுகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல், தான்தோன்றித்தனமான அரசியல் முடிவுகளை எடுக்கின்ற போக்கு, நாள்பட்ட நோயைப் போல, முஸ்லிம் அரசியலில் பரவியிருக்கக் காண்கின்றோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடக்கம், கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட வரவு-செலவுத் திட்டம் வரையில், முஸ்லிம் காங்கிரஸ் உள்ளடங்கலாக ஏனைய எல்லாக் 'காங்கிரஸ்'களும் எடுத்த முடிவுகளால், சமூகத்துக்குக் கிடைத்த நன்மை என்ன என்ற கேள்விக்கு, அவர்களிடமே விடையில்லை.

ஆனால், புத்திபேதலித்தவன் போன்று மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாதவன் வீதியில் விரும்பியவாறு நடந்து கொள்வதைப் போல, முஸ்லிம் அரசியல்வாதிகளும் தமது சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர். சமூகத்தின் நலன்சார்ந்து முடிவெடுக்காமல், தனது முடிவை சமூகத்தின் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க முனைவது இன்னும் தொடர்கின்றது. இந்த வரிசையில், இன்னுமோர் அரசியல் நகர்வு நடப்பதான உணர்வு அண்மைக்காலமாக மேலெழத் தொடங்கியுள்ளது.

தமிழ்க் கட்சிகள் சிலவற்றுடன் இணைந்து, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸூம், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை இலங்கை அரசாங்கம் வழங்குவதற்கு, இந்திய மத்திய அரசை வலியுறுத்தத் தீர்மானித்துள்ளதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

தமிழ் மக்கள், அதிகாரப் பகிர்வைக் கேட்டு நீண்டகாலமாகவே போராடி வருகின்றார்கள். அதன் ஆழ அகலங்கள், அதிலுள்ள சூட்சுமங்கள் எல்லாவற்றையும், அந்த மக்களுக்கு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் போதுமானளவுக்குத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

மறுபுறத்தில், முஸ்லிம் மக்கள் ஒருக்காலும் தனிநாடு கேட்கவும் இல்லை; தனியே தமக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்று கோரவும் இல்லை. அதிகாரப் பகிர்வு பற்றியும் அதிகாரப் பரவலாக்கம் பற்றியும் சுயநிர்ணயத்தின் தாற்பரியங்கள் பற்றியும் 99 சதவீதமான முஸ்லிம் அரசியவல்வாதிகளுக்கே இன்னும் தெரியாது என்பதே நிஜமாகும்.

ஆனால், தமிழர்களுக்கு ஒரு தீர்வு வழங்கப்படும் போது, அதில் ஓர் உபதீர்வு முஸ்லிம்களுக்கும் கிடைக்க வேண்டும். அத்துடன், வடக்கும் கிழக்கும் எவ்விதத்திலும் இணைக்கப்படக் கூடாது என்பதே, இங்கு வாழும் முஸ்லிம்களின் பொதுவான நிலைப்பாடாகும்.

அதாவது, நீண்டகாலமாகப் போராடி வருகின்ற தமிழ் மக்களுக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றே முஸ்லிம்கள் விரும்புகின்றனர். இருப்பினும், சமஷ்டியோ அல்லது அதிகாரமோ அவர்களுக்கு வழங்கப்படும் போது, அது எவ்வகையிலும் முஸ்லிம்களின் நலன்களையும் சுதந்திரத்தையும் பாதிக்காதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆனால், இன்று இந்தியாவிடம் கோரிக்கை விடுக்க நினைக்கும் பிரதான முஸ்லிம் கட்சித் தலைவரான ரவூப் ஹக்கீம், இந்த விடயத்தை இலங்கையிலுள்ள தமிழ்த் தேசிய தலைமைகளிடம் தெட்டத் தெளிவாக, நேரிடையாக எடுத்துரைத்ததாகத் தெரியவில்லை.

அவர் மட்டுமல்ல, வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எம்.பிக்களும் இதனை ஒருமித்த குரலில் வலியுறுத்தவில்லை. முஸ்லிம்களின் அபிலாஷைகள் என்னவென்பதை வெளித்தரப்புகளிடம் கூறத் தேவையில்லை. அதை அரசாங்கத்திடமும் ஏனைய சமூகங்களின் பிரதிநிதிகளிடமும் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். ஆனால், இதில் எல்லோரும் கூட்டத்தோடு தவறிழைத்து விட்டனர்,

சில வாரங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகள் சந்திப்பொன்றை நடத்தியிருந்தன. இதில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளவில்லை. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொண்டது. அக்கூட்டத்தில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த யாழ். சந்திப்பில், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் முஸ்லிம்களின் நிலைப்பாடுகளைச் சரியாக பிரதிவிம்பப்படுத்தினாரா என்ற சந்தேகம் எழுந்தது. ஏனெனில், "ஹக்கீம் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றார் என்றால், அவர் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சம்மதம் தெரிவிப்பாரா" என்ற கேள்வியை, தமிழ் அரசியல்வாதி ஒருவர் முன்வைத்திருந்தார்.

இந்த நிலையிலேயே, தமிழ்க் கட்சிகளுடன் முஸ்லிம் காங்கிரஸூம் இணைந்து அதிகாரப் பகிர்வை வலியுறுத்தப் போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்-முஸ்லிம் உறவு என்பது, மிகவும் முக்கியமானது. இரண்டு சிறுபான்மை இனங்களும் துருவப்படுவதானது பெருந்தேசிய சக்திகளுக்கும், பிரித்தாளுவோருக்கும் சாதகமாகப் போய்விடும் என்பது வரலாறு. அத்துடன், அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்காக தமிழ் அரசியல்வாதிகள் குரல் கொடுத்துவருகின்ற பின்னணியில், அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்காக முஸ்லிம்களும் கைகோர்ப்பது சிறப்பாகும்.

அந்தவகையில், ஏனைய அரசியல் தலைவர்களை விட, அதிகமாக தமிழ் தேசியத்துடன் உறவு கொண்டாடுவதற்காக முஸ்லிம் காங்கிரஸின் தலைவரை பாராட்டலாம். ஆனால், எது எப்படியாயினும் ஒரு விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது, தமிழ் அரசியல்வாதிகள் ஏனைய சமூக அரசியல்வாதிகளோடு எவ்வளவு நெருக்கமாகப் பழகினாலும், தமது சமூகத்துக்கு ஒரு அநீதி இழைக்கப்பட்டால், யார் என்றும் பார்க்காமல் அதனை எதிர்ப்பார்கள். சொல்ல வேண்டிய இடத்தில் தமது சமூகத்தின் நிலைப்பாட்டை சொல்லி விட்டுத்தான் வெளியேறுவார்கள். அதுதான் தார்மிகமும் ஆகும்.

இந்தப் பண்பை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளடங்கலாக, மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் எம். பிக்களும் கற்றுக் கொள்ள வேண்டும்.

சகோதர சமூகங்களுடனான நல்லுறவு மிக அவசியமானது. ஆனால், தாம் எந்த சமூகத்தின் அரசியல் தலைவர், பிரதிநிதி என்பதை எந்த இடத்திலும் மறந்து விடக் கூடாது. நாம் கட்டணம் செலுத்தி நியமித்த ஒரு சட்டத்தரணி, மறுதரப்பின் குரலாக இருப்பதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு நீண்டகாலப் பிரச்சினைகள் உள்ளன. முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள், காணிப் பிரச்சினைகள், யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகள், இனப்பிரச்சினைக்கான தீர்வில் அவர்களது வகிபாகம் எனப் பல விடயங்கள் உள்ளன. தென்னிலங்கை, மலையக முஸ்லிம்களின் பிரச்சினைகள் சற்று வேறுவிதமானவை.

எனவே, முஸ்லிம் சமூகம் தலையில் வைத்துக் கொண்டாடுகின்ற தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும், தமது முதன்மைத் தெரிவு முஸ்லிம் சமூகம் என்ற அடிப்படையில், இப்பிரச்சினைகளைப் பேச வேண்டிய இடத்தில் பேசியே ஆக வேண்டும்.

அரசாங்கத்துடன் பேசினாலும், பெருந்தேசியக் கட்சிகளுடனும் பேசினாலும் தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடினாலும், அங்கு பேசப்படுகின்ற விடயதானம் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடு என்ன என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

அப்படியென்றால், குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பில் எவ்வாறான கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை தலைவர்களும் எம்.பிக்களும் முன்கூட்டியே அறிந்து வைத்திருக்க வேண்டும். அதனை உரிய சந்திப்பில் நேர்மையான முறையில் முன்வைப்பது, முஸ்லிம் பிரதிநிதிகளின் அடிப்படைக் கடமையாகும்.

யாழ்ப்பாணத்திலோ கொழும்பிலோ தமிழ்க் கட்சிகளுடன் ஒரு சந்திப்பு நடக்கின்றது என்றால், அதில் முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமன்றி, ஏனைய முஸ்லிம் கட்சிகளும் பங்கேற்க முன்வர வேண்டும்.

அங்கு முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு இணைப்பு, இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம், காணி விவகாரங்கள் பேசப்படுமாக இருந்தால், அந்த இடத்தில் முஸ்லிம்களின் குரலாக முஸ்லிம் தலைவர்கள் ஒலிக்க வேண்டும்.

இது, முஸ்லிம் தலைவர்கள், எம். பிக்களிடம் சமூகம் முன்வைக்கின்ற கோரிக்கை அல்ல. இது, அவர்கள் ஏற்றுக் கொண்ட கதாபாத்திரத்துக்கும் அதனூடாக அனுபவிக்கின்ற வரப்பிரசாதங்களுக்குமான பிரதான கடமை என்பதை, கனவிலும் நினைவிருக்கட்டும்.

## கடிதங்கள்

### பாடசாலை சேவையை ஆரம்பிக்கவும்



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் இருந்து, மாங்குளம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், உரிய நேரத்துக்குப் பாடசாலை செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக பெற்றோரும் மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஏ-9 வீதியில் கிழவன்குளம், பனிக்கன்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 50 க்கு மேற்பட்ட மாணவர்கள், மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு சென்று வருகின்றனர்.

இந்நிலையில், ஏ-9 வீதியில் பல பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்ற போதும், பஸ்கள் போட்டி போட்டு ஓடுவதாலும் சிறிய தொகை பணமே கிடைக்கும் என்பதாலும், குறித்த பகுதிகளில் இருந்து பயணிகளையும் பாடசாலை மாணவர்களையும் ஏற்றாமல் பயணிக்கின்றன.

இவ்வாறான பின்னணியில், பாடசாலை மாணவர்கள் காலை ஏழு மணிமுதல் வீதியில் வந்து நிற்கின்ற போதும், பல பஸ்கள் மாணவர்களை ஏற்றாது பயணிக்கின்றன. காலை எட்டு மணிவரைகூட, மாணவர்கள் பாடசாலை செல்லமுடியாது வீதியில் நிற்பதை அவதானிக்கலாம்.

பல தடவைகள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் பஸ் சாரதிகள் நடத்துநர்களது அசண்டையீனத்தால், மாணவர்களது கல்வி பாதிக்கப்படுவது குறித்து, எவரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. பஸ்கள் உரிய சேவையை வழங்க, உரிய அதிகாரிகள் பணிக்குமாறும் இல்லையெனில், பாடசாலை சேவையை ஏற்படுத்தித் தருமாறும் பெற்றோரும் மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

– சண்முகம் தவசீலன்

# நடிகை சமந்தாவின் ஆன்மிக பயணம்

நடிகை சமந்தா விவாகரத்து அறிவிப்புக்குப் பின்னர் தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருகிறார். அது மட்டுமின்றி வட இந்திய ஆன்மிகச் சுற்றுலாவுக்கு தனது தோழியுடன் சென்றார்.


இந்த நிலையில் தற்போது மீண்டும் அவர் ஆன்மிகச் சுற்றுலாவுக்கு சென்று உள்ளார். அண்மையில் அவர் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.

அதனை அடுத்து கடப்பாவில் உள்ள மசூதி ஒன்றுக்கும் சென்றுள்ளார். திருப்பதி ஏழுமலையான் கோவில், கடப்பா தர்காவுக்கு சமந்தா விசிட் அடித்த புகைப்படங்கள் இணையதளங்களில் வைரலாகி வருகிறன.

விக்னேஷ் சிவன் இயக்கிவரும் 'காத்துவாக்குல ரெண்டு காதல்' மற்றும் யசோதா, சாகுந்தலம் ஆகிய திரைப்படங்களில் நடித்து வரும் சமந்தா, மேலும் இரண்டு தமிழ், தெலுங்கு திரைப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.









# முதலிடத்தில் கீர்த்தி சுரேஷ்

2021 ஆம் ஆண்டில் டுவிட்டரில் அதிகம் பேசப்பட்ட தென்னிந்திய நடிகர்கள், நடிகைகள் விவரம் வெளியாகியுள்ளது.

இதில் 2021ஆம் ஆண்டு டுவிட்டரில் அதிகம் பேசப்பட்ட தென்னிந்திய நடிகர்கள் பட்டியலில் தளபதி விஜய் முதலிடத்தில் உள்ளார்.

அவரை அடுத்து சூர்யா 4ஆவது இடத்திலும், ரஜினிகாந்த் 7ஆவது இடத்திலும், தனுஷ் 9வது இடத்திலும், அஜித் 10வது இடத்திலும் உள்ளார்கள்.

அதேபோல் 2021ஆம் ஆண்டில் அதிகம் பேசப்பட்ட தென்னிந்திய நடிகைகளில் முதலிடத்தில் கீர்த்திசுரேஷ் உள்ளார். அவரை அடுத்து பூஜா ஹெக்டே, சமந்தா, காஜல் அகர்வால், மாளவிகா, ரகுல்பிரீத்தி சிங், சாய்பல்லவி, தமன்னா, அனுஷ்கா ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.







# பூதமாக மாறிய பிரபுதேவா




நடிப்பு, நடனம், இயக்கம் என பன்முக திறமையுடன் இருக்கும் பிரபுதேவா வித்தியாசமான கதையம்சம், கதாபாத்திரம் உள்ள திரைப்படங்களை தெரிவு செய்து நடிக்கிறார்.

'பொய்க்கால் குதிரை' என்ற திரைப்படத்தில் ஒற்றைக்காலுடன் நடிக்கிறார். ஒரு நிஜ கால் மற்றும் ஒரு செயற்கை காலுடன் இருக்கும் பிரபுதேவாவின் தோற்றம் ஏற்கெனவே வெளியாகி எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் `மை டியர் பூதம்' என்ற பெயரில் தயாராகும் திரைப்படத்தில் பூதமாக நடிக்கிறார். பிரபுதேவா பூதம் தோற்றத்தில் இருக்கும் போஸ்டரை படக்குழுவினர் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். இந்தப் போஸ்டர் வைரலாகி வருகிறது.

திரைப்படத்தை ராகவன் இயக்குகிறார். இதில் நாயகியாக ரம்யா நம்பீசன் நடிக்கிறார். பிரபுதேவா நடித்த 'பொன் மாணிக்கவேல்' திரைப்படம் அண்மையில் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகி வரவேற்பை பெற்றது.

படப்பிடிப்பு முடிந்து திரைக்கு வரத்தயாராக இருந்த 'தேள்' திரைப்படம் சில பிரச்சினைகளால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. `யங் மங் சங்', `பஹிரா' மற்றும் பெயரிடப்படாத இரண்டு திரைப்படங்களிலும் நடித்து வருகிறார் பிரபுதேவா.

புதுடெல்லி

நாங்கள் பயங்கரவாதத்தை ஒழிக்க முயற்சிக்கையில்

# பாகிஸ்தான் ஊக்குவிக்கிறது

## பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆவேசம்



இந்தியாவில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்க பாகிஸ்தான் விரும்புகிறது. ஆனால், நாங்கள் பயங்கரவாதத்தை வேரோடு ஒழிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆவேசமாக பேசினார்.

இந்தியா கேட் பகுதியில் நடந்த நிகழ்ச்சியில், ராஜ்நாத் சிங் பங்கேற்று பேசியதாவது: 1971ஆம் ஆண்டு, பாகிஸ்தானின் திட்டங்களை இந்திய இராணுவம் முறியடித்தது. இப்போது பயங்கரவாதத்தை வேரிலிருந்து ஒழிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

வங்கதேசத்தில் ஜனநாயகத்தை நிறுவுவதற்கு இந்தியா பங்களித்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில், வங்கதேசம் வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வருகிறது. இது உலகின் பிற நாடுகளுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் உள்ளது.

கடந்த 1971ஆம் ஆண்டு, இந்திய, பாகிஸ்தான் போரை வென்ற 50ஆவது ஆண்டு கொண்டாட்டத்திற்காக நாம் இன்று இந்தியா கேட் பகுதியில் கூடியிருக்கிறோம். தெற்காசியாவின் வரலாறு, புவியியல் இரண்டையும் மாற்றியதில் இந்தப் போருக்கும் இந்தியப் படைகளுக்கும் முக்கிய பங்கு இருக்கிறது. இந்தப் புகழ்பெற்ற வெற்றியை இந்த விழா நினைவுபடுத்துகிறது.

முப்படை தலைமை தளபதி பிபின் ராவத்தின் திடீர் மறைவுக்குப் பிறகு, இதை எளிமையாகக் கொண்டாடுகிறோம். நான் அவரது சாதனைகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த விரும்புகிறேன். இந்த நாளில், 1971 போரில் வெற்றி பெற்ற இந்திய இராணுவத்தின் ஒவ்வொரு வீரரின் வீரத்திற்கும், தியாகத்திற்கும் நான் தலைவணங்குகிறேன் என்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசினார்.

புதுடெல்லி

திரிணமுல் காங்கிரஸின் கணக்கு

# நோபல் பரிசுக்கு உகந்தது

## ப.சிதம்பரம் கிண்டல்

ஒவ்வொரு குடும்ப தலைவிக்கும் ரூ.5,000 வழங்கப்படும் என்னும் திரிணமுல் காங்கிரஸின் கணக்கு, பொருளாதார நோபல் பரிசுக்கு உகந்ததாக உள்ளது என ப.சிதம்பரம் கிண்டல் செய்துள்ளார்.

கோவாவை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கோவாவில் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறவுள்ள சட்டசபை தேர்தலில் 40 தொகுதிகளிலும் போட்டியிடுவதாக திரிணமுல் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

அதைத் தொடர்ந்து, 'கிருஹலட்சுமி' திட்டத்தின் கீழ் கோவாவில் ஒவ்வொரு குடும்பத் தலைவிக்கும் மாதம் ரூ.5,000 வழங்கப்படும் என்று திரிணமுல் காங்கிரஸ் கோவா மாநில பொறுப்பாளரும் எம்.பி.யுமான மஹூவா மொய்த்ரா அறிவித்துள்ளார்.



இதை விமர்சித்து காங்கிரஸ் மூத்த தலைவரும், கட்சியின் கோவா மாநில தேர்தல் பொறுப்பாளருமான ப.சிதம்பரம் டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

திரிணமுல் காங்கிரஸின் கணக்கு, பொருளாதார நோபல் பரிசுக்கு உகந்ததாக உள்ளது. கோவாவில் 3.5 இலட்சம் குடும்பங்களுக்கு மாதம் ரூ 5,000 வழங்கினால் மாதம் ரூ.175 கோடி செலவாகும். ஆண்டுக்கு ரூ.2,100 கோடி செலவாகும். கடந்த 2020 மார்ச் மாத நிலைவரப்படி, கோவாவின் கடன் நிலுவை ரூ.23,473 கோடியை ஒப்பிடும்போது, இது சிறிய தொகைதான். கோவாவை கடவுள் காப்பாற்றட்டும் அல்லது; கடவுளை கோவா காப்பாற்றட்டும் என்று சிதம்பரம் கூறியுள்ளார்.

இதையடுத்து, வாக்குறுதியளித்தபடி மக்களுக்கு உதவித்தொகை அளிக்க முடியுமென்று மஹவா மொய்த்ரா பதிலளித்துள்ளார்.

டேராடூன்

55 ஆண்டுகள் ஆட்சி புரிந்த காங்கிரஸாருக்கு

# நாட்டின் மீது சிறிதும் பற்று இல்லை

## உத்தரகண்ட் முதலமைச்சர்



55 ஆண்டுகள் ஆட்சி புரிந்த காங்கிரஸாருக்கு நாட்டின் மீது சிறிதளவும் பற்று இல்லை. துக்க நேரத்தில் கூட கொண்டாட்டம் நடத்துகின்றனர் என்று உத்தரகண்ட் முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி விமர்சனம் செய்துள்ளார்.

உத்தரகண்டில் முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஆட்சி நடக்கிறது. அங்கு டேராடூனில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் 90 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை அவர் ஆரம்பித்து வைத்தார். அதன் பின் அவர் பேசியதாவது:

முப்படை தலைமை தளபதி பிபின் ராவத்தின் மறைவால் ஒட்டுமொத்த நாடும் துக்கத்தில் இருந்து வரும் நிலையில் கோவாவில் காங்கிரஸ் கட்சியினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தியா சுதந்திரம் பெற்றபின் 60 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்தது. இதில் 55 ஆண்டுகள் ஒரு குடும்பத்திடமே ஆட்சி அதிகாரம் இருந்தது. இவ்வளவு ஆண்டுகள் ஆட்சி புரிந்தும் அக்கட்சித் தலைவர்களுக்கு நாட்டின் மீது சிறிதளவு கூட பற்று இல்லை. ஒட்டுமொத்த நாடும் துக்கத்தில் உள்ள நேரத்தில் அவர்கள் கோவாவில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கி உள்ளனர். அக்கட்சித் தொண்டர்கள் ஆட்டம் போட்டு அதைக் கொண்டாடி வருகின்றனர். இதற்கு அக்கட்சியினர் வெட்கப்பட வேண்டும்.அவர்களின் இந்த உணர்வற்ற தன்மையை மக்கள் கவனிக்க வேண்டும்.

ஹோலி, தீபாவளி, தன் பிறந்தநாளை எல்லையில் கொண்டாடும் பிரதமர் நரேந்திர மோடியுடன், காங்கிரஸ் தலைவர்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டும் என்றார்.

ஜெய்ப்பூர்

மகாத்மா காந்தி இந்து;

# கோட்சே இந்துத்துவவாதி

## ராகுல் காந்தி



மகாத்மா காந்தி இந்து; ஆனால், கோட்சே இந்துத்துவவாதியாக இருந்தார். நான் இந்து; ஆனால் இந்துத்துவவாதி அல்ல என்று ராகுல் காந்தி பேசினார்.

விலைவாசி உயர்வு, கொரோனா நிவாரணம் உள்ளிட்ட பிரச்சினைகளில் மத்திய அரசை கண்டித்து புதுடெல்லியில் மாபெரும் போராட்டம் நடத்த காங்கிரஸ் கட்சி திட்டமிட்டது. ஆனால், புதுடெல்லியில் அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து இந்தப் போராட்டம் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு மாற்றப்பட்டது.

இந்தப் பிரம்மாண்ட பொதுக்கூட்ட பேரணியில் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்பட காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தி கூறியதாவது: இந்திய அரசியலில் தற்போது இந்து மற்றும் இந்துத்துவவாதி என இரண்டு வார்த்தைகளுக்கு இடையேதான் பெரும் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் உள்ளன என்றார்.

புதுடெல்லி

# யாருக்கும் ஆதரவில்லை

## விவசாயிகள் சங்கத் தலைவர் அறிவிப்பு



விரைவில் நடைபெற உள்ள உத்தர பிரதேச மாநிலத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவு அளிக்கப்போவதில்லை என்று விவசாயிகள் சங்கத் தலைவர் ராகேஷ் திகாயத் தெரிவித்து உள்ளார்.

வேளாண் சட்ட மூலத்தை வாபஸ் பெறுவதாக பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் தொடக்க நாளில் மத்திய அரசு அறிவித்ததையடுத்து, விவசாயிகள் போராட்டத்தை வாபஸ் பெற்று, தங்கள் சொந்த மாநிலங்களுக்கு திரும்பிச் சென்றனர்.

இந்நிலையில் செய்தியாளர்களை சந்தித்த ராகேஷ்திகாயத் விவசாயிகளின் போராட்டத்தை ஊடகங்கள் முன்னிலைப்படுத்தியதால் தான் மத்திய அரசுக்கு அழுத்தம் ஏற்பட்டது. இதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள் எங்களை எங்கு அழைத்தாலும் அங்கு சென்று கூட்டங்களை நடத்த உள்ளோம். வரும் 17ஆம் திகதி தமிழ்நாட்டிற்கும், 19ஆம் திகதி மகாராஷ்டிரா விற்கும் செல்லவிருக்கிறோம் என்று கூறினார்.

## எல்.பி.எல்:
# கிளாடியேட்டர்ஸை வீழ்த்திய ஸ்டார்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கோல் கிளாடியேட்டர்ஸ் உடனான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் வென்றது.

மழையால் பாதிக்கப்பட்ட 18 ஓவர்கள் கொண்ட இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டார்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.




அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், ஆரம்பத்திலேயே பதும் நிஸங்கவை சமித் பட்டேலிடம் இழந்தபோதும், அஷான் பிரியஞ்சனின் இணைப்பில் மத்தியூஸ் ஓட்டங்களைச் சேகரித்தார்.

பின்னர் குறிப்பிட்ட இடைவெளிகளில் பிரியஞ்சன், டொம் பன்டன், சீக்குகே பிரசன்னா ஆகியோர் இசுரு உதான, பட்டேல், நூர் அஹ்மட்டிடம் வீழ்ந்தபோதும் ஓட்டங்களைத் தொடர்ந்து சேகரித்த மத்தியூஸ், 73 (57) ஓட்டங்களுடன் மொஹமட் ஆமிரிடம் வீழ்ந்தார்.

இதையடுத்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய தினேஷ் சந்திமால் 36 (14) ஓட்டங்களுடன் தனஞ்சய லக்‌ஷனிடம் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த றவிந்து பெர்ணான்டோவிடம் உடனேயே லக்‌ஷனிடம் வீழ்ந்த நிலையில், 18 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களையே ஸ்டார்ஸ் பெற்றது. பந்துவீச்சில், பட்டேல் 4-0-23-2, ஆமிர் 4-0-23-1, நுவான் துஷார 1-0-7-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 163 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ் சார்பாக குசல் மென்டிஸ் மாத்திரமே 64 (39) ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஏனையோர் குறிப்பிட்ட இடைவெளிகளில் பிரசன்னா (2), பிரியஞ்சன் (1), ரவி ராம்போல் (2), நவீன்-உல்-ஹக் (3), துஷ்மந்த சமீரவிடம் (1) விக்கெட்டுகளை வரிசையாகப் பறிகொடுத்து 16.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களையே பெற்று 41 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், நவீன்-உல்-ஹக் 3.5-0-27-3, பிரசன்னா 4-0-23-2, ராம்போல் 4-0-36-2, பிரியஞ்சன் 2-0-10-1, சமீர 2-0-15-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக சந்திமால் தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஸ்டார்ஸும், கண்டி வொரியர்ஸும் மோதவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிளாடியேட்டர்ஸும் தம்புள்ள ஜையன்ட்ஸும் மோதவுள்ளன.

## வெற்றி கிண்ணத்தை சுவீகரித்த
# மாவட்ட செயலக அணிக்கு கௌரவம்

■ க. விஜயரெத்தினம்



கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ணத்தை சுவீகரித்த மாவட்ட செயலக அணியை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் பாராட்டி கௌரவித்தார்.

கருணாகரனது தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. தயாபரன், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். அமிர்தலிங்கம் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகளும் கலந்துகொண்டு மாவட்ட செயலக அணியினரை வாழ்த்தியதுடன் நினைவுச்சின்னம் உள்ளிட்ட சான்றிதழ்களையும் வழங்கிவைத்தனர்.

இதன்போது கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவட்ட செயலக அணி வெற்றியிட்டி மாவட்ட செயலகத்துக்கு பெருமை சேர்த்துக்கொடுத்துள்ளமையை முன்னிட்டு மாவட்ட அரசாங்க அதிபரால் விசேடமாக பாராட்டுகளை தெரிவித்ததுடன், தனது வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை மாவட்ட செயலக அணியினர் பெற்றுக் கொண்ட கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ணத்தை மாவட்ட அரசாங்க அதிபரிடம் உத்தியோகபூர்வமாக வழங்கிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 46ஆவது கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில்
# சம்பியனான அம்பாறை




■ எப். முபாரக், ஒலுமுதீன் கியாஸ்

46ஆவது கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகள், கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வானது, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.எம். எல். பண்டாரநாயக்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இறுதிநாள் விருது வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். சி.எல். பெர்ணான்டோ கலந்து சிறப்பித்தார்.

இவ்விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஜே. ரக்சயா சிறந்த சுவட்டு வீராங்கனையாகவும், அம்பாறை மாவட்டத்தின் எம்.எச். சபீர் அலி சிறந்த சுவட்டு வீரராகவும், ஈட்டி எறிதலில் பங்குபற்றிய அம்பாறை மாவட்டத்தின் டி.எம்.ஐ. ஹசந்தி சிறந்த மைதான நிகழ்ச்சிக்குரிய வீராங்கனையாகவும், நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய திருகோணமலை மாவட்டத்தின் ஏ. ஆபித் சிறந்த மைதான நிகழ்ச்சிக்குரிய வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சபீர் அலி, 46 கிழக்கு மாகாண மெய்வல்லுனர் போட்டியின் அதி திறமை வாய்ந்த வீரராக தெரிவு செய்யப்பட்டதுடன், பெண்களுக்குரிய மெய்வல்லுநர் போட்டியில் இரண்டாமிடத்தை அம்பாறை மாவட்டமும், முதலாமிடத்தை மட்டக்களப்பு மாவட்டமும், ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் திருகோணமலை மாவட்டம் இரண்டாமிடத்தையும், அம்பாறை மாவட்டம் முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

ஒட்டுமொத்த மெய்வல்லுநர் போட்டிகளின் புள்ளிகளின் அடிப்படையில் இம்முறை சம்பியனாக முதலாமிடத்தை அம்பாறை மாவட்டமும், இரண்டாமிடத்தை மட்டக்களப்பு மாவட்டமும் பெற்றுக்கொண்டது.

கிழக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம். நௌபீஸ், திணைக்கள தலைவர்கள், நடுவர்கள், பயிற்சியாளர்கள், மூன்று மாவட்டங்களின் வீர வீராங்கனைகளும் கலந்து சிறப்பித்தனர்.

நியூசிலாந்து

# ஒரே நாளில் 10 முறை தடுப்பூசி செலுத்திய நபர்



நபர் ஒருவர் ஒரே நாளில் 10 முறை கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்ட சம்பவம் நியூசிலாந்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த நபர் 24 மணி நேரத்தில் வெவ்வேறு நபர்களின் அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி 10 முறை கொரோனாத் தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் ஏன் இவ்வாறு செய்தார் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

இது குறித்து அந்நாட்டு கொவிட் -19 தடுப்பூசி மற்றும் நோய்த்தடுப்பு திட்டத்தின் குழு மேலாளர் ஆஸ்ட்ரிட் கோர்னிஃப், கருத்துத் தெரிவிக்கையில், “நாங்கள் இந்த விஷயத்தை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். இதுபோன்ற ஏராளமான தடுப்பூசிகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படும் விளைவு குறித்த தரவுகள் எதுவும் தற்போது இல்லை. அதனால், ஒரு நாளைக்கு 10 டோஸ்களை எடுத்துக் கொள்ளும் ஒருவருக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என சொல்வது மிகவும் கடினம். அவ்வாறு எடுத்துக் கொள்வது நிச்சயம் பாதுகாப்பானது அல்ல. எனவே இவ் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது” என்றார்.

டுபாய்

# காகிதத்தை ஒழித்தது டுபாய்

அலுவலகப் பணிகளில் 100 % காகிதத்தை பயன்படுத்தாத முதல் அரசாக டுபாய் மாறியுள்ளது.

இது குறித்து டுபாயின் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் கருத்துத் தெரிவிக்கையில், “டுபாய் அரசின் அனைத்து உள் மற்றும் வெளி தொடர்புகள், பரிவர்த்தனைகள், சேவைகள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக மாறிவிட்டன. எனவே இனி டுபாய் உலகின் முன்னணி டிஜிட்டல் தலைநகராக விளங்கும்” எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் காகித பயன்பாடு இல்லா நிர்வாகத்தால், அரசுக்கு 350 மில்லியன் டொலர் பணம் மிச்சமாகும் என்றும் இதனால் 14 மில்லியன் மனித வேலை நேரங்களும் லாபம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் டுபாய் அரசு இனி 1,800 வகையான டிஜிட்டல் சேவைகள் மூலம் நிர்வகிக்கப்படும் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## மகளைப் போல் நடித்து
# இளைஞர்களை காதல் வலையில் வீழ்த்திய தாய்

பெண்ணொருவர் அவரது மகளைப் போல் நடித்து, இளைஞர்கள் பலரை தனது காதல் வலையில் வீழ்த்தி, பணமேசடி செய்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


அமெரிக்காவின் மிசோரி பகுதியில் வசித்து வந்த லாராத ஒக்லெஸ்பி என்ற 45 வயதான பெண்ணே இரண்டு வருடங்களாக இச்செயலில் ஈடுபட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தனது மகளின் புகைப்படத்தைப் பயன்படுத்தி பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்று வந்துள்ளதுடன், தனக்கு 22 வயதுதான் ஆகிறது எனக் கூறி பலரையும் நம்ப வைத்துள்ளதாகவும், அத்துடன் தான் ஒரு கல்லூரி மாணவி எனக் கூறி இலங்கை மதிப்பில் சுமார் 50 லட்சம் ரூபாய் வரை கல்விக்கடன் பெற்றுக்கொண்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் சமூக வலைதளத்தில் தனது மகளின் புகைப்படத்தை பயன்படுத்தி இளைஞர்களை காதல் வலையில் வீழ்த்தி அவர்களிடமிருந்து பணத்தையும் பெற்று வந்துள்ளார்.


இந்நிலையில் அவரது கல்விக்கடன் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தியபோதே லாரா ஒக்லெஸ்பி ஏமாற்றியமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி, லாராவுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் மகளைப் போல் நடித்து ஏமாற்றிய குற்றத்திற்காக மகளுக்கும், சம்பந்தப்பட்ட கல்லூரிக்கும் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.



அமெரிக்கா

# காதலனுக்கு விலைமாதுவை பரிசளித்த அழகி



அமெரிக்காவைச் சேர்ந்த கசுமி எனப்படும் பிரபல மொடல் அழகியொருவர் தனது காதலனுக்கு விநோதமான கிறிஸ்மஸ் பரிசொன்றை வழங்கியுள்ளார்.


24 வயதான அவர் வேலைப்பளு காரணமாக தனது காதலருடன் அதிகளவான நேரத்தை செலவிடவும், அவருடன் உல்லாசமாக இருக்க முடியாதாலும் தனது காதலரை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் பரிசொன்றை வழங்க விரும்பியுள்ளார்.

அந்தவகையில் தனது காதலருக்கு வேறு ஒருவருடன் உல்லாசமாக இருக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க நினைத்தார்.

இதுகுறித்து அவரின் காதலரிடம் கேட்டபோது அவரும் சம்மதம் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அதிகாரபூர்வமான விபச்சார தொழில் நடைபெற்று வரும் இடமொன்றிற்கு தனது காதலரை அழைத்துச் சென்ற கசுமி, 30 நிமிடங்கள் காதலருடன் நேரத்தை செலவிட விலை மாது ஒருவரை ஒப்பந்தம் செய்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த கசுமி, “நாங்கள் இருவரும் நல்ல முறையில் நெருக்கமாக உள்ளோம். இருந்தாலும் அவருக்கு இதையும் தாண்டி அதிகமான மகிழ்ச்சி அளிக்க விரும்பினேன். பணம் கொடுத்து உடலுறவு வைப்பத்தில் மக்கள் அவமானப்படக் கூடாது. அத்துடன் நானும் எனது மகிழ்ச்சிக்காக வேறொரு நபரை தேடிக்கொண்டிருக்கிறேன்” என்றார்.



பிரான்ஸ்

# மீனுக்கு விரித்த வலையில் சிக்கிய சடலம்

மீனவர்கள் வீசிய வலையில் ஆணின் சடலமொன்று சிக்கிய சம்பவம் பிரான்சில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸில் உள்ள பா து கலே என்ற கடற்பகுதியில் மீனவர்கள், மீன் பிடித்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த மீனவர்கள் தாம் விரித்த வலையில் அதிக எடை கொண்ட மீன் ஒன்று சிக்கியதாக உணர்ந்ததாகவும், இதனால் வலையை வெளியில் எடுத்துப் பார்த்ததாகவும், இதன் போது அதில் ஆண் ஒருவரின் சடலம் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகவும் தெரிவித்துத்துள்ளனர்.

அதன்பின்னர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததாகவும்,அங்கு விரைந்த பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டு விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 14 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.